
**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




Printed Matter

ஜூலை
3

To

**BOOK POST**

If Undeliveried please return to ...


**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




ஜூலை
15

மலர் 21 ஜூலை 2025 இதழ் 7

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.07.2025 | Tuesday | | Class - Major Seminary | Trivandrum |
| 02.07.2025 | Wednesday | 6.30 am | Holy Mass | DM-Provincialate<br>Marthandam |
| 03.07.2025 | Thursday | 3.00 pm | Augustinian Sisters Convent Blessing and Holy Mass | Manjathoppu |
| 04.07.2025 | Friday | <br>5.00 pm | Class - Major Seminary<br>Holy Mass - Mar Ivanios Tomb | Trivandrum<br><br>Pattam |
| 05.07.2025 - 08.07.2025 | Saturday - Tuesday | | TNBC Meet | Poondi |
| 12.07.2025 | Saturday | 11.00 am | Dyanam | Kuzhithurai |
| 13.07.2025 | Sunday | 6.30 am | Holy Mass | Cathedral<br>Marthandam |
| 14.07.2025 | Monday | 3.30 pm<br>6.00 pm | UCC Meeting<br>Evening Prayer<br>Candle Procession | Palapallam<br>Pattom<br>Pattom |
| 15.07.2025 | Tuesday | | Mar Ivanios Day | Pattom |
| 16.07.2025 | Wednesday | 9.00 am<br>10.00 am | Chapel Blessing<br>Fresher's Day<br>Mar Ephraem College | Eng. College<br>Elavuvilai |
| 20.07.2025 - 25.07.2025 | Sunday- Friday | | Retreat for Priests Batch - I | Kothamangalam<br>Diocese |
| 26.07.2025 | Saturday | 9.00 am<br>10.00 am<br>4.00 pm | Mar Ephraem College<br>Pastoral Council Meeting<br>First Holy Communion and Holy Mass | Elavuvilai<br>Bishop's House<br>Peruvilai Shrine |
| 28.07.2025 - 31.07.2025 | Monday - Thursday | | Retreat for Priests Batch - II | Kothamangalam<br>Diocese |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 ஜூலை 2025 இதழ். 7


**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*





மலர். 22 ஜூன் 2025 இதழ். 6

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam

**முக்கியமான நாட்கள்**

ஜூலை 2025

மலர்.22 ஜூலை 2025 இதழ்.7

| | |
|---|---|
| 01 | தேசிய மருத்துவர் தினம் (இந்தியா) |
| 07 | உலகளாவிய மன்னிப்பு தினம் |
| 11 | உலக மக்கள் தொகை தினம் |
| 12 | தேசிய எளிமை தினம் |
| 15 | உலக இளைஞர் திறன் தினம் |
| 17 | சர்வதேச நீதிக்கான உலக தினம் |
| 20 | சர்வதேச சதுரங்க தினம் |
| 22 | தேசியக் கொடி தினம் (இந்தியா) |
| 27 | APJ அப்துல் கலாம் அவர்களின் நினைவு தினம் தேசிய பெற்றோர் தினம் |
| 28 | உலக இயற்கை பாதுகாப்பு தினம் |
| 29 | சர்வதேச புகள் தினம் |
| 30 | சர்வதேச நட்பு தினம் |

## உள்ளடக்கம்


1. Circular 03
2. மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா, மேதகு ஆயரின் பெயர்கொண்ட விழா 09
3. மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன் 10
4. நற்செய்தி சங்க செய்திகள் 11
5. மறைபரப்புத் தளச்செய்திகள் 11
6. குருமட செய்திகள் 12
7. அருட்தந்தை முனைவர் யூஜின் அவர்களுக்கு வாழ்த்துகளும்! பாராட்டுகளும்!! 13
8. Bishop’s Feast Day Charity Fund 14
9. Change of Address 21
10. MIDS 23
11. MCYM 26
12. திருமண ஆயத்தப்பயிற்சி 26
13. MCA 27
14. தாய்மார் சங்கம் 29
15. பெயர்விழா நல்வாழ்த்துகள் 29
16. Hom - Special School for the Mentally Retarded 30
17. மலங்கரை கத்தோலிக்க கல்லூரி 31
18. மறைவட்ட செய்திகள் 33
19. ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள் 36
20. இம்மாதம் நினைவு கூர 39
21. Bishop's Diary 40



*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**மேஜர் ஆர்ச்சு பிஷப் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 1/2025

*தாமாய்த் தோன்றியவரும் ஆதிமுடிவற்றவரும், உள்ளியல்பில் சரிநிகர் ஆனவருமாய் இருக்கிற மூவோர் இறைவனுக்குப் புகழ்.*

**வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-வது நினைவுத் திருநாள் மற்றும் திருப்பயணம் - 2025**

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

மலங்கரை திருச்சபையில் பிளவுகளால் ஏற்பட்ட காயங்களை ஆற்றி ஆயிரக்கணக்கான மக்களை உண்மை விசுவாச பாதையில் வழிநடத்த ஆண்டவர் தேர்ந்துகொண்ட வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-ம் நினைவுத்திருநாள் 2025 ஜூலை 15-ம் நாள் பட்டம் புனித மரியன்னை உயர் பேராய பேராலயத்தில் அனுசரிக்கப்படுகிறது. அத்துடன் பேராயரின் ஆயர் அருட்பொழிவின் நூற்றாண்டு விழாவும் கொண்டாப்படுகின்றது. ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை இத்திருநாளுக்கான ஆயத்தத் திருச்சடங்குகள்

அவரது கல்லறை அருகே நடைபெறும். நமது திருச்சபையில் ஜூலை 1 முதல் 15 வரை வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வையும் முன்மாதிரியான எண்ணங்களையும் சொந்தமாக்கி கொள்ள நோன்பு கடைபிடிப்பது சாலச் சிறந்தது. கட்டாயத்தினால் அல்ல இந்நோன்பை விரும்பி அனைவரும் கடைபிடிக்க நினைவூட்டுகிறேன். நாம் இறைமக்கள் ஆவதற்கு தங்கள் வாழ்நாளில் நமக்கு கற்பித்தவர்களாகிய ஆயர் பெருமக்களை திருச்சபை மக்கள் நினைத்து கொண்டாடுவது ஆசீர் நிறைந்த ஒரு செயல். இந்த நினைவுத் திருநாளை திருச்சபையில் புது எழுச்சியும் நிறை ஆசீரும் கிடைக்க காரணமாகட்டுமென இறைவேண்டல் செய்கிறேன். இதனை முன்னிட்டு ஒழுங்குபடுத்தப்படும் ஆன்மீகச் நிகழ்வுகளில் பங்கேற்க இறைமக்கள் சமூகத்தை இதயபூர்வம் அழைக்கிறேன்.

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வை ஆச்சரியத்துடன் தான் பார்க்க முடியும். காலம் செல்லச் செல்ல அவரது எண்ணங்களும் நிலைப்பாடுகளும் முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. தலைமுறைகள் காத்திருந்த ஒன்றிப்பின் பாதையை கண்டறிந்து எதிர்ப்புகளைக் கடந்து அமைதியுடன் அந்த பாதையில் வாழ்ந்து முன்னேற மார் இவானியோஸ் ஆண்டகைக்கு இயன்றது. தன்னை வருத்திய அனுபவங்கள் வாயிலாகவும் உண்மையை தேடும் பண்பாலும் நேர்மையின் பாதையை, வரும்தலைமுறைக்கு அவர் திறந்து வைத்தார். கடந்து வந்த பாதையில் கடவுள் கரம் இருந்தது என்பதற்கு அவர் வாழ்வே சான்று. மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை வளர்ச்சியின் பாதையில் வலம் வந்து அகில உலக அளவில் பெருமைப்படுத்தப் பட்டுள்ளது. வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை தேர்ந்து கொண்ட பாதை கடவுளின் திருவுளத்தை சார்ந்தது என்பதின் சான்று இதுவே.

### ஆயர் அருட்பொழிவின் நூற்றாண்டு விழா

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை ஆயர் அருட்பொழிவு பெற்று 100 ஆண்டுகள் நிறைவடைகின்றன. மலங்கரை சபையில் அமைதி மலர பெற்றுக் கொண்ட அழைப்பே அவரது ஆயர் நிலை. துறவறத்தில் மூழ்கிய அவரது வாழ்வு, ஒப்பற்றதாகவும் பிறருக்கு



சவாலாகவும் உள்ளது. 1925 மேய் மாதம், முதல் நாள் நிரணம் ஆலயத்தில் வைத்து அவர் ஆயர் அருட்பொழிவு பெற்றார். அவரது அன்றைய மறையுரையில் உண்மை நம்பிக்கையின் பாதையை திருச்சபை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இறைநம்பிக்கையின் ஆழங்களுக்கு இறைமக்கள் கடந்து வரவேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார். “கேரள சுறியானி கிறிஸ்தவர்கள் ஒரு திருச்சபையாய் இருந்தது போல மறுவொன்றிப்படைந்து கேரள சுறியானி மக்கள் ஒரே ஆயனும் ஒரே மந்தையும் என்ற இறைவார்த்தையை வாழ்வாக்க முயற்சிக்க வேண்டும்”. ‘‘இறைபக்தியின்மையே நம் மத்தியில் காணப்படும் மிகப்பெரிய குறையென நான் நம்புகிறேன். கடவுளின் திட்டங்களுக்கு இதோ நான்! என பதில்மொழி தந்து தலைமைகுருவின் திருப்பணியை அவர் கரடுமுரடான பாதை வழியாக வாழ்ந்து முன்னேறினார். வெற்றுக் கையுடன் முண்டன்மலையை விட்டு இறங்கிய போது அவர் முன் தோன்றிய பாதை இருளடைந்தது அல்ல. ‘ஆண்டவர் காத்துக் கொள்வார்’ என்னும் உள்ளுணர்வு அந்த பாதையில் ஒளிர்ந்தது. கடவுளின் திட்டத்திற்கு கீழ்ப்படிந்து மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையை உருவாக்கி வளரச் செய்த அந்த மாமேதையின் வாழ்வு நமக்கு மாதிரியும் உந்து சக்தியுமாக உள்ளது. அவரது திருத்தூதுவத் திருப்பணியும் வாழ்வும் நற்செய்தியை எடுத்தோதியது. தோழமை உணர்வுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. மலங்கரை சபையின் ஒன்றிப்பை தனது திருப்பணியின் கனவாக கண்டார். அவரது ஆயர் நிலை திருப்பணிகள் வாயிலாக நமக்கு கிடைத்த ஆசீர்வாதங்களை இந்நினைவுத் திருநாளில் திருச்சபையாக ஒன்றிணைந்து கடவுளின் திருமுன் நன்றி கூறுவோம்.

### நினைவுத்திருநாள் 2025

2025 ஜூலை 1 - 14 வரையுள்ள நாட்களில் மார் இவானியோஸ் ஆண்டகை இறுதி ஓய்வு கொள்ளும் பட்டம் புனித மரியன்னை உயர் பேராலயத்தில் நினைவுத் திருநாள் கொண்டாடப்படுகிறது. திருப்பலி, தூப மன்றாட்டு, மறையுரை போன்றவை நடைபெறும். ஜூலை 10-ம் தேதி பெரு நாட்டிலிருந்து ஆரம்பமாகும் திருப்பயணம் 14- ம் தேதி மாலை 5 மணிக்கு அவரது கல்லறையை வந்தடையும். மாலை 6.30 மணிக்கு மாலை

ஜெபமும் அதனைத் தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏந்திய திருப்பவனி நடைபெறும். நினைவுத் திருநாளாகிய ஜூலை 15-ம் நாள் நடைபெறும் ஆடம்பர கூட்டுத் திருப்பலியில் நம் திருச்சபையின் அனைத்து ஆயர்களும், குருக்களும் பங்கேற்க வேண்டும்.

**சிறப்பு விருந்தினர்**

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலையின் நூற்றாண்டு விழாவிலும் 72-வது நினைவுத் திருநாளிலும் உரோமைத் திருப்பீடத்தின் சர்வதேச வாரியத்தின் காரியத்தரிசி பேராயர் போள் கல்லகர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதயபூர்வமான நன்றியை திருப்பீடத்திற்கு பதிவு செய்கிறேன்.

**திருப்பயணம் 2025**

நினைவுத் திருநாளை முன்னிட்டு பெருநாட்டிலிருந்து ஆரம்பமாகும் திருப்பயணம் 2025 ஜூலை 10-ம் நாள் காலை 6.30 மணிக்கு நடைபெறும் திருப்பலியுடன் ஆரம்பமாகும். பல்வேறு மறைமாவட்டங்களிலிருந்து அவர்கள் திட்டமிடுகின்ற நாட்களில் ஆரம்பமாகும் பயணக்குழுக்கள் ஜூலை 14-ம் நாள் மாலை 5.00 மணிக்கு வணக்கத்திற்குரிய பேராயரின் கல்லறைக்கு வந்தடைய வேண்டும்.

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வுடன் கலந்து அது வழியாக கிறிஸ்துவுக்கு சான்று பகர இந்த திருப்பயணம் ஒரு வாய்ப்பாக அமைகிறது. இத்திருப்பயணத்தை நம்மை புனிதப்படுத்தி கொள்வதற்கும் திருச்சபையை புனிதப்படுத்த கிடைக்கும் வாய்ப்பாகவும் காண்போம். நோன்பிருந்து ஒறுத்தல்கள் கடைபிடித்து இறைவேண்டலுடன் திருப்பயணத்தில் பங்கேற்க அனைவரையும் அழைக்கிறேன். திருப்பயணத்திற்கு ஆன்மீக ஆயத்தம் தேவை என்பதை நினைவுபடுத்துகிறேன். அமைதியும் தியான உணர்வு கொண்ட பங்கேற்பு, உறுதிப்படுத்தப்பட வேண்டும். வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை புனிதர்களின் பட்டிகையில் சேர்த்து ஆண்டவரே எங்களுக்கு அவரை மத்தியஸ்தராய் தாருமென திருப்பயணத்தில் மன்றாடுவோம்.



நினைவுத் திருநாளை முன்னிட்டு 15 நாட்கள் நடைபெறும் திருநிகழ்வுகளின் செலவுகளை காணிக்கையாக வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதனைக் குறித்த கூடுதல் தகவல்களுக்கு 9447429520 என்னும் அலைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்க. இத்தேவைகளுக்காக நீங்கள் வழங்கும் நன்கொடையினை நாலாஞ்சிறை South Indian வங்கியிலும் அனுப்பி வைக்கலாம். (Accounting Name – Mar Ivanios Day Celebrations Major Archdiocese of Trivandrum. Account No. 0483053000020740. IFSC Code: SIBL0000483. The South Indian Bank, Nalanchira, Trivandrum). இறைமக்கள் இந்த காரியத்தில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென நினைவுபடுத்துகிறேன்.

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் பாதச்சுவடுகளை பின்பற்றி நமது திருச்சபையை நேசிக்கவும், செயல்படவும் முயற்சிப்போம். நம்பிக்கையுடன் பேராயரின் பரிந்துரை நாடுவோம். வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆண்டவர் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

கடவுளின் கருணையும் ஆசீரும் உங்கள் அனைவர் மேலும் இறங்கி தங்குவதாக. இது இறையன்னையாகிய கன்னிமரியாளுடையவும், திருத்தூதர் குழுமத்தினுடையவும், சிறப்பாக நமது தந்தையாகிய மார் தோமாவின் மன்றாட்டாலும் அமைவதாக. ஆமேன்!

*இவண்,*
*ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,*

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் க்ளீமீஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்
திருஅவையின் உயர் பேராயர் - காதோலிக்கோஸ்

20-06-2025
காதோலிகேட் மையம்,
பட்டம், திருவனந்தபுரம்.

## நிகழ்வுகள்

**2025 ஜூலை 10 வியாழக்கிழமை - முதல் நாள்**

காலை 6.30 மணி : காலை மன்றாட்டு, திருப்பலி
: ராந்நி - பெருநாடு, குரிசுமலை
தலைமை : மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் காதோலிக்க பாவா

**ஜூலை 14 திங்கள் - ஐந்தாம் நாள்**

மாலை 5.00 மணி : திருப்பயண குழுமம் கல்லறை சிற்றாலயம் வந்து சேர்கிறது

மாலை 6.00 மணி : மாலை ஜெபம் - பேராலயம் மெழுகுவர்த்தி பவனி, கல்லறையில் தூப மன்றாட்டு திருத்தூதுவ ஆசீர்

**ஜூலை 15 செவ்வாய் - 72-ம் நினைவு திருநாள்**

காலை 8.00 மணி : வரவேற்பு, காலை ஜெபம் ஆடம்பர கூட்டுத்திருப்பலி

தலைமை : மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் காதோலிக்கா பாவா

அருளுரை : பேராயர் போள் கல்லகர் (உரோமை திருப்பீடத்தின் சர்வதேச வாரியத்தின் காரியத்தரிசி)

கல்லறையில் தூப மன்றாட்டு

அன்பின் விருந்து



# மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா, மேதகு ஆயரின் பெயர்கொண்ட விழா

ஜூன் மாதம் 28-ம் தியதி சனிக்கிழமை மறைமாவட்ட தினம் மற்றும் மேதகு ஆயர் அவர்களின் பெயர்கொண்ட விழாவும் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது. அன்று காலையில் சுமார் 6.45 மணியளவில் ஆயர் அவர்களுக்கு ஆராதனை முறைப்படி வரவேற்பு வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக மாவேலிக்கரை மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை அவர்களளும், கூரிய ஆயர் ஆன்றணி மார் சில்வானோஸ் அவர்களும் மறைமாவட்ட விழா திருப்பலியிலும் மற்றும் நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருப்பலியை தொடர்ந்து ஆயர் அவர்களுக்கு பெயர் கொண்ட விழாவின் வாழ்த்துக்கூட்டமும் நடைபெற்றது. திருப்பலியின் மத்தியில் நற்செய்தி சங்கத்தை சார்ந்த 10 நபர்களுக்கு நற்செய்தி அறிவிப்புப் பணிக்கான அதிகார பூர்வமான கைவைப்பு வழங்கப்பட்டது. திருப்பலி முடிந்து பெயர்கொண்ட விழா சிறப்பு நிதி உதவி சமர்ப்பணம் நடைபெற்றது. இந்நிகழ்வுகளை தொடர்ந்து சுமார் 11.30 மணியளவில் குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் புதிதாக்கம் செய்யப்பட்ட மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் அர்ச்சிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளிலெல்லாம் ஆயர்கள், மறைமாவட்ட குருக்கள், இருபால் துறவிகள், மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்கள், ஆலய பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்

மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக வருடம்தோறும் நடத்தப்பட்டுவரும் 'மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்' இந்த ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் தேதி தொடங்கி ஜூன் மாதம் 8-ஆம் தேதி வரை மூன்று நாட்களாக நடைபெற்றது. இந்த பைபிள் கன்வென்சனில் ஏராளமான மக்கள் இறைவார்த்தை பகிர்வில் பங்கெடுத்து இறையாசீர் பெற்றுக்கொண்டனர். அருட்தந்தை. ரிட்சி வின்சென்ட் அவர்கள் இறைவார்த்தையை பகிர்ந்தளித்தும், மிக ஆழமான இறைசிந்தனைகளை மிக எளிய முறையில் விளக்கி கூறியும், மிக சிறப்பாக மூன்று நாட்களாக நடைபெற்ற கன்வென்சனை ஆன்மீக முறையில் வழிகாட்டினார்கள். பெந்தெகோஸ்தே திருநாளுக்கு ஆயத்தமாக நடைபெற்ற மூன்று நாள் விவிலிய கன்வென்சனில் 'இறைவார்த்தையை' மையசிந்தனையாக கொண்டு இறைவார்த்தை பகிரப்பட்டு சிந்தனைக்கு தூண்டப்பட்டது. ஒவ்வொரு நாள் கன்வென்சனும் மாலை ஜெபம் மற்றும் ஜெபமாலையோடு தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக ஆண்டவருக்கு புகழ்ப்பாடல்களும், புகழ்ச்சி மன்றட்டுகளும் ஏறெடுக்கப்பட்டு, இறைவார்த்தை பகிரப்பட்டது. இறைவார்த்தை பகிர்விற்கு பின்பு தினமும் நற்கருணை ஆராதனையும் நடைப்பெற்றது. மூன்று நாள்களிலும் திராளான மக்கள் ஒவ்வொரு மறைவட்டங்களிலிருந்து வந்து பங்கெடுத்து இறையாசீர் பெற்றுச் சென்றனர். இந்நிகழ்வில் குருக்கள் மற்றும் அருட்கன்னியர்கள் பங்கெடுத்து சிறப்பித்தார்கள்.



# நற்செய்தி சங்க செய்திகள்

நமது மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா மற்றும் மேதகு ஆயரின் பெயர் கொண்ட விழாவின் திருப்பலியின் போது நமது மார்த்தாண்டம் மறைமாவட்டத்தை சார்ந்த பத்து நபர்களுக்கு நற்செய்தி பணிக்குழு சார்பான கை வைத்தல் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இதில் மேதகு ஆயர் ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகை அவர்கள் திருவிவிலியத்தை கைவைத்தல் ஆசீர்வாதம் பெறுபவர்களின் தலையில் வைக்க, மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலையில் கை வைத்து ஜெபிக்க, மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை மெழுகுதிரி வழங்கி ஆசீர்வாதம் வழங்கினார்கள். இதில் கை வைத்தல் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டவர்கள் கிராத்தூர் பங்கை சார்ந்த ஏழு நபர்கள். பாத்திமாநகர் பங்கை சார்ந்த இரண்டு நபர்கள் மற்றும் நடைக்காவு பங்கை சார்ந்த ஒரு நபரும் ஆவர்.

# மறைபரப்புத் தளச்செய்திகள்

## தேவதானப்பட்டி மறைபரப்புத் தளம்

- ★ அருட்தந்தை அஜின் அலோஷியஸ் அவர்கள் 17.06.2025 அன்று தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயம் தோவதானபட்டியின் உதவி பங்குதந்தையாக பொறுப்பேற்றுக் கொண்டார் .

# குருமட செய்திகள்

❖ அருட்சகோதரர்கள் தங்களுடைய கோடை விடுமுறையை முடித்து 05.06.2025 -ஆம் நாள் குருமடத்திற்கு வருகை தந்தார்கள்.

❖ 08.06.2025 -ஆம் நாளன்று புது குருமாணவர்கள் குருமடத்திற்கு வருகை தந்தார்கள். அவர்களுடைய பெயர்பட்டியல் :

Bro. லிப்டன் ராஜதுரை, இலவன்சிபுரம்
Bro. அமல் ராஜ், ஆற்றூர் Bro. எட்வின், விமலபுரம்
Bro. ஆஷிக், வலியவிளை Bro. அபினவ், பின்குளம்




❖ 17.06.2025 -ஆம் நாளன்று அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்களுக்கு ஒரு வருடப்பணியை பாராட்டி பிரியாவிடை வழங்கப்பட்டது.

❖ 18.06.2025 -ஆம் நாள் குருமடத்தில் புனித எப்ரேம்னுடைய நினைவு நாள் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் குருமடத்தின் புது அதிபர்தந்தையாக அருட்தந்தை சிபி அவர்கள் பொறுப்பேற்றார்.



❖ 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைமாவட்ட ஆயர் அருட்சகோதரர்களை சந்தித்து திருப்பலி நிறைவேற்றி அவர்களுக்காக ஜெபித்ததோடு மட்டுமல்லாமல் ஓர் அருமையான வகுப்பையும் எடுத்தார்.

❖ 28.06.2025 சனிக்கிழமை அன்று அருட்சகோதரர்கள் பேராலயத்தில் நடைபெற்ற மறைமாவட்ட தினத்திலும் ஆயரின் பெயர் விழா நிகழ்விலும், மேய்ப்புப்பணி நிலையம் அர்ச்சிப்பு திருநிகழ்விலும் கலந்துகொண்டனர்.

## அருட்தந்தை முனைவர் யூஜின் அவர்களுக்கு வாழ்த்துகளும்! பாராட்டுகளும்!!



நமது மறைமாவட்டத்தை சார்ந்த அருட்தந்தை யூஜின் அவர்கள் ஜூன் மாதம் 20-ம் தேதி உரோமை கிரிகோரியன் பல்கலைக்கழகத்திலிருந்து திருச்சபை சட்டத்தில் பட்டம் பெற்றுக்கொண்டார். அத்துடன் திருத்தந்தையின் தூதரகப் பணிகளுக்கான பயிற்சியும் நிறைவு செய்துள்ளார். தொடர்ந்து செப்டம்பர் மாதத்தில் பராகுவே நாட்டில் தனது களப்பணியை தொடங்கவிருக்கிறார். நமது மறைமாவட்டம் அருட்தந்தையை மனதார பாராட்டி மகிழ்கிறது. இவர் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையிலிருந்து திருத்தந்தையின் தூதரகப் பணிகளில் பணியமர்த்தப்படும் மூன்றாவது நபர். அருட்தந்தை அவர்களின் பணி சிறக்க வாழ்த்துவோம். இறைவேண்டல் செய்வோம்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர் 

# Bishop's Feast Day Charity Fund
## Diocese of Marthandam
## 2024 - 2025

### 1. Kaliakkavilai District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Mariagiri | 10,000.00 |
| 2 | Nadaikkavu | 10,000.00 |
| 3 | Koickathoppu | 5,000.00 |
| 4 | Meenachal | 3,000.00 |
| 5 | Mecode | 5,000.00 |
| 6 | Mankad | 5,000.00 |
| 7 | Adichavilagam | 5,000.00 |
| 8 | Sooriacode | 3,000.00 |
| 9 | Chekkittuvilai | 1,000.00 |
| | **Total** | **47,000.00** |

### 2. Kollamcode District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Ambilikonam | 5,000.00 |
| 2 | Pallukuzhy | 2,000.00 |
| 3 | Pushpagiri | 5,000.00 |
| 4 | Fathimanagar | 5,000.00 |
| 5 | Pinkulam | 3,000.00 |
| 6 | Oorambuvilai | 2,000.00 |
| 7 | Kidarakuzhy | 3,000.00 |
| 8 | Palavilai | 5,000.00 |
| 9 | Kaduvakuzhy | 2,000.00 |
| 10 | Adaikkakuzhi | 5,000.00 |
| 11 | Kirathoor | 10,000.00 |
| 12 | Manjathoppu | 5,000.00 |
| 13 | Punnamoottukadai | 3,000.00 |
| | **Total** | **55,000.00** |



### 3. Kulasekharam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Charoor | 3,000.00 |
| 2 | Ganapathikal | 2,000.00 |
| 3 | Kulasekharam | 2,000.00 |
| 4 | Pechipparai | 2,000.00 |
| 5 | Mukkampala | 1,000.00 |
| 6 | Anakkarai | 5,000.00 |
| 7 | Muthalar | 3,000.00 |
| 8 | Mathar | 5,000.00 |
| 9 | Cherupalloor | 3,000.00 |
| 10 | Peruvazhikkadavu | 1,000.00 |
| 11 | Zero Point | 1,000.00 |
| 12 | Sivalogam | 2,000.00 |
| 13 | Anbunager | |
| | **Total** | **30,000.00** |

### 4. Panachamoodu District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Panachamoodu | 5,000.00 |
| 2 | Vettukuzhi | 2,000.00 |
| 3 | Puliyoorsala | 2,500.00 |
| 4 | Keezhmancode | 2,000.00 |
| 5 | Kanchiyode | 3,000.00 |
| 6 | Kulapparai | 2,000.00 |
| 7 | Vellachipparai | 2,500.00 |
| 8 | Karumanoor | |
| 9 | George Nager (Mughavoor) | 3,000.00 |
| 10 | Thachoorkonam | 5,000.00 |
| 11 | Chempakatharisu | 500.00 |
| | **Total** | **27,500.00** |

## 5. Marthandam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Attoor | 5,000.00 |
| 2 | Mathoorkonam | 3,000.00 |
| 3 | Kuzhithurai | 5,000.00 |
| 4 | Marthandam | 25,000.00 |
| 5 | Kannacode | 3,000.00 |
| 6 | Unnamalakadai | 5,000.00 |
| 7 | Chitharal | 2,500.00 |
| 8 | Soosaipuram | 5,000.00 |
| 9 | Vimalapuram | 10,000.00 |
| 10 | Serottukonam | 1,500.00 |
| 11 | Konam | 5,000.00 |
| 12 | Valiyavilai | 3,000.00 |
| | **Total** | **73,000.00** |

## 6. Azhakiyamandapam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Vazhodu | 2,000.00 |
| 2 | Seynamvilai | 2,000.00 |
| 3 | Pilankala | 10,000.00 |
| 4 | Poonthoppu | 2,000.00 |
| 5 | Alwarcoil | 2,000.00 |
| 6 | Aloor | 1,000.00 |
| 7 | Chellamkonam | 15,000.00 |
| 8 | Kattuvilai | 3,000.00 |
| 9 | Punkarai | |
| 10 | Verkilambi | 5,000.00 |
| | **Total** | **42,000.00** |



## 7. Nagercoil District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Christuvilagam | 5,000.00 |
| 2 | Chettikulam | |
| 3 | KalliKulam | 2,000.00 |
| 4 | Aanapottai | 1,500.00 |
| 5 | Mathias Nager | 2,000.00 |
| 6 | Ganadasapuram | 1,000.00 |
| 7 | Navalkadu | 5,000.00 |
| 8 | Erachakulam | 1,500.00 |
| 9 | Parvathipuram | 2,000.00 |
| 10 | Thenikulam | 3,000.00 |
| 11 | Kanyakumari | 2,000.00 |
| 12 | James Town | 1,000.00 |
| 13 | Mantharamputur | 1,000.00 |
| 14 | Bhoothapandi | 500.00 |
| 15 | Mukkadal | 1,500.00 |
| 16 | Aloor | 1,000.00 |
| 17 | Kumarapuram | 1,000.00 |
| | **Total** | **31,000.00** |

## 8. Missions

| No. | Missions | Amount |
|---|---|---|
| 1 | Devathanampatti | 3,000.00 |
| 2 | Nallanathapuram | 2,000.00 |
| | **Total** | **5,000.00** |

## 9. Schools & Colleges

| No. | Schools & Colleges | Amount |
|---|---|---|
| 1 | MSC Schools | 185,562.00 |
| 2 | Little Flower School, Pushpagiri | 10,000.00 |
| 3 | St.Mary's, Mariagiri | 25,000.00 |

| | | |
|---|---|---|
| 4 | St.Xaviers, Palavilai | 5,000.00 |
| 5 | Mar Ivanios, Kuzhithurai | 10,000.00 |
| 6 | Mar Gregorios, Kirathoor | 25,000.00 |
| 7 | Mary Mount, Annakarai | 5,000.00 |
| 8 | Christuraja, Marthandam | 10,000.00 |
| 9 | MCC | 1,00,000.00 |
| 10 | Mar Ephream Engineering College | 1,16,617.00 |
| 11 | Malankara School of Commerce | 10,000.00 |
| 12 | Mar Chrysostom Bed College | 10,000.00 |
| | **Total** | **512,179.00** |

## 10. Pious Association

| No. | Pious Association | Amount |
|---|---|---|
| 1 | Vincent De Paul | 3,000.00 |
| 2 | Catechism | 2,000.00 |
| 3 | MCA | 5,000.00 |
| 4 | Legion of Mary | 1,000.00 |
| 5 | Mother's Forum | 2,000.00 |
| 6 | Pastoral Council | 10,000.00 |
| | **Total** | **23,000.00** |

## 11. Institutions

| No. | Institutions | Amount |
|---|---|---|
| 1 | MIDS | 75,000.00 |
| 2 | HOM | 5,000.00 |
| 3 | MPDNL | 1,00,000.00 |
| 4 | Mar Ivanious Animation Centre | 5,000.00 |
| | **Total** | **1,85,000.00** |

## 12. Individual

| No. | Individual | Amount |
|---|---|---|
| 1 | C.Syrus Alphonsa (Vimalapuram) | 2,000.00 |
| 2 | Thankaraj (Melpalai) | 3,000.00 |
| 3 | Padmini Teacher | 100.00 |
| 4 | Rosammal, Maria Rasal | 2,500.00 |
| 5 | Suresh (Chellamkonam) | 100.00 |
| 6 | Rajendran (Mariagiri) | 10,000.00 |
| 7 | T.Francis (Chellamkonam) | 2,000.00 |
| 8 | Justin (Kirathoor) | 1,000.00 |
| 9 | Mary Greena (Attoor) | 500.00 |
| 10 | Francis Raj (Eng) | 5,000.00 |
| 11 | Joseph (Kirathoor) | 1,000.00 |
| 12 | Francis (Nadaikavu) | 1,000.00 |
| 13 | Paulraj (Koickalthoppu) | 5,000.00 |
| 14 | Bishop's House Staff | 3,000.00 |
| 15 | MCA Sabathala Samithi | 25,000.00 |
| 16 | Vijayan and Rajan | 25,000.00 |
| | **Total** | **86,200.00** |



## 13. Convents & Religious

| No. | Convents & Religious | Amount |
|---|---|---|
| 1 | DM Provincial House, Marthandam | 25,000.00 |
| 2 | DM Convent, Kirathoor | 2,000.00 |
| 3 | DM Convent, Marthandam | 2,000.00 |
| 4 | DM Convent, Anakkarai | 1,000.00 |
| 5 | DM Convent, Mathar | 2,000.00 |
| 6 | DM Convent, Tara Hostel | 2,000.00 |
| 7 | DM Convent, Vimalapuram | 1,000.00 |
| 8 | DM Convent, Meenachal | 1,000.00 |
| 9 | DM Convent, Kumaracoil | 1,000.00 |
| 10 | DM Convent, Mariagiri | 1,500.00 |
| 11 | DM Convent, Chellamkonam | 5,000.00 |
| 12 | DM Convent, Kanchiyode | 5,000.00 |
| 13 | DM Convent, Pilankalai | 2,000.00 |
| 14 | DM Convent, Alancholai | 1,000.00 |

| | | |
|---|---|---|
| 15 | DM Convent, Panachamoodu | 5,000.00 |
| 16 | DM Convent, Stella Maris | 5,000.00 |
| 17 | DM Convent, Emmaus | 2,000.00 |
| 18 | DM Convent, Assisi Nilayam | 2,000.00 |
| 19 | DM Convent, Pushpagiri | 1,000.00 |
| 20 | DM Convent, Attoor | 1,500.00 |
| 21 | Gesher, Germany | 10,000.00 |
| 22 | Dortmund, Germay | 10,000.00 |
| 23 | D.S.S Sisters | 1,000.00 |
| 24 | SJSM Sisters, Mecode | 2,000.00 |
| 25 | Sister of Charity | 10,000.00 |
| 26 | Holy Spirit Sisters | 5,000.00 |
| 27 | SIC Provincial House, Trivandrum | 25,000.00 |
| 28 | Santhi Ashram | 12,000.00 |
| | **Total** | **143,000.00** |

| | | |
|---|---|---|
| **1** | **Convents & Religious** | **143,000.00** |
| **2** | **Individuals** | **86,200.00** |
| **3** | **Schools & Colleges** | **512,179.00** |
| **4** | **Institutions** | **185,000.00** |
| **5** | **Pious Associations** | **23,000.00** |
| **6** | **Kaliakkavilai District** | **47,000.00** |
| **7** | **Kollamcode District** | **55,000.00** |
| **8** | **Kulasekharam District** | **30,000.00** |
| **9** | **Panachamoodu District** | **27,500.00** |
| **10** | **Marthandam District** | **73,000.00** |
| **11** | **Azhakiyamandapam District** | **42,000.00** |
| **12** | **Nagercoil District** | **31,000.00** |
| **13** | **Missions** | **5,000.00** |
| | **Total** | **1,259,879.00** |



# Change of Addresses

**Rev. Fr. Sibi**
The Rector
St. Ephraem Minor Seminary,
Elavuvilai & P.O,
K.K. District – 629 171

**Rev. Fr. Micheal Mukkampalath**
St. John Maria Vianney Priests Home, Edaivilagam,
Kazhuvanthittai, Kuzhithurai P.O,
K.K. District – 629 163

**Rev. Fr. Bernad**
Malankara Catholic Church
Ambilikonam, Adaikkakuzhi P.O.
Mankuzhi, K.K.District – 629 153

**Rev. Fr. Yesudas**
Malankara Catholic Church
Chellamkonam, Kappiara P.O.,
K.K. District – 629 156

**Rev. Fr. Darbello Christus**
St. Mary's Malankara Seminary,
Mar Ivanios Vidya Nagar,
Nalanchira, Trivandrum – 695 015

**Rev. Fr. Robert**
Mercy Home (For the Aged and Destitute), Diocese of Marthandam, Selvanputhoor,
Mantharamputhoor,
Kottaram - 629 703,
Kanyakumari District.

**Rev. Fr. Sajith Francis**
Malankara Catholic Church
Christuvilakam, Krishnancoil P.O.
Nagercoil,
K.K. District – 629 001

**Rev. Fr. John Shibu**
Malankara Catholic Church
Pushpagiri, Fathima Nager P.O.,
Adaikkakuzhi Village,
K.K. District – 62 9160

**Rev. Fr. Ratheesh Richard**
St.Thomas MSC Church
Aatuparai, Boothapandi,
Boothapandi P.O,
K.K. District – 629 852

**Rev. Fr. Jebin John**
St.Mary's Malankara Catholic Church
Malankara Bhavan,
Periyar Nagar, Kanyakumari,
K.K. District – 629 702

**Rev. Fr. Anish**
St. Pauls Seminary,
Pudukottai Rd,
Bharathiyar Salai,
Sangillyandapuram,
Trichy - 620 001

**Rev. Fr. Siljin**
St. Joseph Malankara Catholic Church, Anakkarai,
Chenkody P.O.,
Via Thiruvattar,
K.K. District – 629 177

**Rev. Fr. Sunish Kumar**
Grace Home, St. Michael The Archangel Malankara Catholic Church, 3rd Cross, Indira Colony,
Pottaicovil, Erachakulam,
Tamil Nadu - 629 852

**Rev. Fr. Sabin**
Grace Home, St. Michael The Archangel Malankara Catholic Church, 3rd Cross, Indira Colony,
Pottaicovil, Erachakulam,
Tamil Nadu - 629 852

**Rev. Fr. Ivin Anto**
Bishop's House
Marthandam,
K.K. District – 629 165

**Rev. Fr. Paulson**
Bishop's House
Marthandam,
K.K. District – 629 165

**Rev. Fr. Rejin Raj**
St.Thomas MSC Church
Aatuparai, Boothapandi,
Boothapandi P.O,
K.K. District – 629 852

**Rev. Fr. Anto Jebin**
9/41 Pastoral Centre,
Kuzhithurai, Kuzhithurai P.O,
K.K. District – 629 163

**Rev. Fr. Robin**
Sacred Heart of Jesus and Mary Malankara Catholic Church Cheruppaloor P.O.
Kulasekaram,
K.K. District – 629 161

**Rev. Fr. Ajin Alocious**
St. Mary's Malankara Catholic Church, Marian Nagar,
Therku Theru,
Devadanapatty – 625 602
Theni District.

**Rev. Fr. Jerome Godwin**
Malankara Catholic Church
Mathar, Chenkody P.O.,
K.K. District – 629 177.

**Rev. Fr. Maria Poppul Revin**
Malankara Catholic Church
Kirathoor, Kirathoor P.O.
K.K. District – 629 160.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**சமத்துவ மானுடம் – கோடைகால பயிற்சி முகாம்**

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தளிர்கள் உலகம் திட்டத்தில் 7 மற்றும் 8-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கு மே மாதம் 26, 27 மற்றும் 28 ஆகிய மூன்று தினங்கள், மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து சமத்துவ மானுடம் என்னும் கருப்பொருளை மையமாக வைத்து கோடைகால பயிற்சி முகாம் நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கு பாலின சமத்துவம், வாழ்வியல் மதிப்பீடுகள், யோகா வகுப்புகள், புத்தக வாசிப்பு பயிற்சிகள், விளையாட்டுகள், மருத்துவ ஆலோசனைகள், படிக்கும் வழிமுறைகள், தலைமைத்துவம், காய்கறி தோட்டம் அமைக்கும் பயிற்சி, ஆன்மீக ஆலோசனைகள் போன்றவை குறித்து இந்த மூன்று நாட்களும் பல்வேறு பயிற்சியாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. வாழ்விற்கு தேவையான அடிப்படை பண்புகளை வளர்த்து, மாணவர்கள் தங்களை தாங்களே மெருகூட்டிக்கொள்ளும் விதத்தில் இந்த பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த பயிற்சி முகாமிற்கு வருகை தந்திருந்த மாணவர்கள் தங்களுக்கு இந்த பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாகவும், சலிப்பு ஏற்படாமல் மிகவும் உற்சாகமாக இருந்ததாகவும் கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 43 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்த பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**உதவித்திட்டங்கள்**

### Thalirkal Ulagam - Account Closing

தளிர்கள் உலகம் திட்டத்தின் வழியாக கல்வி உதவி தொகை பெற்று பள்ளி கல்வியை நிறைவு செய்து தற்போது உயர்கல்வி கற்பதற்காக இந்த திட்டத்திலிருந்து விடைபெறும் பயனாளி களுக்கான சிறப்பு கூட்டம் 13.06.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையேற்று மாணவர்களை வாழ்த்தியதுடன் அறிவுரைகளும் வழங்கினார்கள். மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் இத்திட்டம் வழியாக தாங்கள் அடைந்த நன்மைகளை அனுபவமாக பகிர்ந்தனர். தொடர்ந்து 58 மாணவர்கள் தங்களின் வங்கி கணக்கை முடித்து இத்திட்டத்திலிருந்து விடைபெற்றனர். சிறுசேமிப்பு தொகை மொத்தம் ரூபாய் 10,11,808/- பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

**கல்வி உதவித்தொகை வழங்குதல்**

தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்வானது 28.05.2025 அன்று மதியம் 2 மணிக்கு மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாலின சமத்துவம் என்னும் தலைப்பில் பேராசிரியர் லியோ பிறைட் சிங் அவர்கள் கருத்தரங்கு நடத்தினார்கள். பின்னர் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.



தொடர்ந்து மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வில் ஒழுங்காக வருகை புரிந்த 26 மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 7,800/- தேர்வு கட்டணம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து 186 பயனாளிகளுக்கு ரூபாய் 4,65,000/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 25.05.2025 அன்று, இந்த கல்வியாண்டில் மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்கான வழிகாட்டுதல் பயிற்சி அன்னை ஆதா பயிற்சி மையத்தின், இயக்குநர் அருட்தந்தை றாபின்சன் அவர்களால் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 118 மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

2. 07.06.2025 அன்று மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கான சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மாணவர்களின் பெற்றோருக்கு முனைவர். அரசு அவர்களால் மன அழுத்த மேலாண்மை என்னும் தலைப்பில் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சிகளில் 43 மாணவ மாணவியர்களும் 34 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

3. 17.06.2025 முதல் 19.06.2025 வரை KKID, கோயம்புத்தூரில் வைத்து நடைபெற்ற நிதி மேலாண்மை, பட்ஜெட் கட்டுப்பாடு மற்றும் வரிவிதிப்பு குறித்து நடைபெற்ற பயிற்சியில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், கணக்கர் திருமதி புஷ்பலதா, நுண்கடன் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் C. ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவையொட்டி எல்லா வருடமும் நாம் நடத்துகின்ற பாதயாத்திரை முன்னோடியாக இந்த வருடம் எல்லா பங்குகளிலும் பாதயாத்திரைக்கு கொண்டு செல்கின்ற மார் இவானியோஸ் ஆண்டகையின் திருஉருவ படமும், திருச்சிலுவையும் நம்முடைய பங்குகளில் பேரணியாக கொண்டுவரப்பட்டது.

மேதகு ஆயர் அவர்களின் பெயர்கொண்ட விழாவை முன்னிட்டு மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்கள் இணைந்து 29.06.2025 மதியம் 2.00 மணியளவில் மேதகு ஆயர் அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்து நாமவிழா வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். தொடர்ந்து இளையோர் இயக்கத்தின் நிகழ்வுகளை ஆயரோடு கலந்துரையாடி சரியான வழிகாட்டுதலை பெற்றுக்கொண்டார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 ஜுலை** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **18, 19** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.





### *MCA* சபையளவிலான மகளிர் மாநாடு

மலங்கரை சபையளவிலான மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் சார்பில் மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA தலைமையில் மகளிர் மாநாடு மற்றும் சுற்றுச்சூழல் தினக் கொண்டாட்டம் 28.06.2025 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேய்ப்பு பணி நிலையம், மார் எப்ரேம் வளாகம் குழித்துறையில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்களுக்கு தமிழ் பாரம்பரிய முறையில் வரவேற்பு வழங்கப்பட்டது. மறைமாவட்ட ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்களால் MCA கொடியேற்றப்பட்டு, கொடிக்கு மரியாதையும், உறுதிமொழியும் ஏற்கப்பட்டது. சபையளவிலான பொது செயலாளர் திரு. ராஜேந்திரபாபு அனைவரையும் வரவேற்க, சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது. மாநாட்டிற்கு சபாதல தலைவர் திரு. பைஜு அவர்கள் தலைமை தாங்கினார். மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் செடிக்கு தண்ணீர் ஊற்றி துவக்கவுரை ஆற்றி மாநாட்டினை துவங்கி வைத்தார்கள். முன்னதாக மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை

அவர்களுக்கு நாமவிழா வாழ்த்துக்கள் கூறப்பட்டது. பின்பு ஆயர் அவர்கள் கேக் வெட்டி மகிழ்வை பகிர்ந்து கொண்டார்கள். மேதகு ஆயர் ஜோஷ்வா மார் இக்னாத்தியோஸ், குருகுல முதல்வர் மோண் ஜோஸ் பிறைட் அவர்களால் வாழ்த்துரை வழங்கப்பட்டது. டாக்டர். ஜோசப் ராஜகுமார் அவர்களால் “இயற்கையை காப்போம், உயிர் காப்போம்” என்ற தலைப்பில் கருத்துரையும், டாக்டர் சிமி IRS அவர்களால் “பெண்மையை போற்றும் என்ற தலைப்பில் கருத்துரையும் வழங்கப்பட்டது. மறைமாவட்ட தலைவர் திரு. வர்க்கீஸ் அவர்களால் அனைவருக்கும் நன்றி கூற, சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. ஆண்டகைக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசும் வழங்கப்பட்டது. நிகழ்வில் தாய்மார் சங்க பாடல் வெளியிடப்பட்டது. தாய்மார் சங்க இயக்குனர் அருட்சகோ ஷீபா ஜாண், தலைவி திருமதி மினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலந்துகொண்ட அனைவருக்கும் பணப்பயிராக “ரம்புட்டார்” தை வழங்கி மாலை உணவும் வழங்கப்பட்டது. மகளிர் மாநாட்டின் 400-க்கும் மேற்பட்ட மகளீர் பல வண்ண உடையில் கலந்துகொண்டார். மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளும் மறைமாவட்ட MCA தலைமையில் தாய்மார் சங்கமும் இணைந்து செய்யப்பட்டது.



# தாய்மார் சங்கம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட தாய்மார் சங்கத்தின் கீதம் (MCMF Anthem) 28.06.2025 (சனிக்கிழமை) அன்று மார் எப்ரேம் வளாகத்தில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்களால் வெளியிடப்பட்டு குருக்குல முதல்வர் ஜோஸ் பிரைட் அவர்களால் பெறப்பட்டது. இந்த கீதம் தாய்மார்களின் அடையாளமாகவும், இறையன்பு மற்றும் மக்கள் ஒருமைப்பாட்டை பிரதிபலிக்கும் விதமாக அமைந்துள்ளது.


## பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை
**தோமஸ் காவுவிளை**
ஜுலை 03



அருட்தந்தை
**அலெக்ஸ் குமார்**
ஜுலை 17



அருட்தந்தை
**அபின்சன் அலெக்ஸ்**
ஜுலை 17



அருட்தந்தை
**ஜிபு மேத்யூ**
ஜுலை 25

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

**ஹோம் – சிறப்புப் பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாம் மாவட்ட நீதிபதி உதய சூரியா பங்கேற்பு :-**

குழித்துறையில் செயல்பட்டு வரும் ஹோம் அறிவு சார் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளியில் 20.06.2025 அன்று சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. மாவட்ட சிவில் நீதிமன்ற நீதிபதியும், மாவட்ட சட்ட பணிகள் குழுமத்தின் செயலாளருமான நீதிபதி உதய சூரியா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவரை அறிவு சார் குறைபாடுடைய சிறப்புக் குழந்தைகள் பேண்ட் வாத்தியம் முழங்க வரவேற்று நடனமாடினார்கள். நீதிபதியும் சிறப்பு குழந்தைகளின் நடனங்களை ரசித்து உற்சாகப்படுத்தினார்.

தொடர்ந்து நீதிபதி உதய சூரியா தம் உரையில் கூறியதாவது அனைவரும் நன்றாக நடனமாடியதாகவும், பாட்டு பாடியதாகவும் பாராட்டு தெரிவித்தார். நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம் 1500 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு உறுதுணையாக நீதிமன்றம் எப்போதும் இருக்கும் என்றும் சட்டம் சார்ந்த தேவைகளுக்கு எப்போதும் நாடலாம் என்றும் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து சிறப்புக் குழந்தைகள் கடவுளுக்கு நிகரானவர்கள் அவர்களுக்கு எந்த தீங்கும் வந்து விடக் கூடாது என்பதில் நீதிமன்றமும், மாவட்ட சட்டப்பணிகள் குழுவும், வட்ட சட்டப்பணிகள் குழுவும் கவனமாக இருப்பதாக உரையாற்றினார்.



# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

**1. 2025–'26 –ம் ஆண்டைய துவக்கம்**

2025 -'26-ம் ஆண்டைய கல்லூரியின் வகுப்புகளானது 16.06.2025 அன்று ஆரம்பமானது. கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பித்து வைத்தார்கள். கல்லூரியின் நிதிகாப்பாளர் அருட்தந்தை விவிலிய விளக்கம் அளித்தார்கள். சிறப்பு ஜெபத்தை அருட்தந்தை வினுகுமார் அவர்கள் நடத்தினார்கள். வாழ்த்துரையை கல்லூரியின் முதல்வர் முனைவர் பீட்டர் அமலதாஸ் அவர்கள் நிறைவேற்றினார்கள். கல்லூரியின் அனைத்து வகுப்புகளும் ஆய்வகங்களும் ஆசீர்வதிக்கப்பட்டது.

**2. புதிய தாளாளர் பதவியேற்பு**

மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் கடந்த 4 ஆண்டுகளாக பணியாற்றிய பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்களின் பதவிக்காலம் முடிந்ததை அடுத்து கல்லூரியின் புதிய தாளாளராக பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் பதவியேற்றார்கள். கல்லூரியின் மேலாளர் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பௌவுலோஸ் அவர்கள் பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்களுக்கு நன்றிகளையும் புதிய தாளாளராக பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள்.

**3. நிலத்தியல் துறை கருத்தரங்கு**

நிலத்தியல் துறை சார்பில் ஒருநாள் கருத்தரங்கானது 23.06.2025 அன்று பூமி, சூழல் மற்றும் சுற்றுப்புறம் எனும் மையக்கருத்தில் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக மனோன்மணியம்

சுந்தரனார் பல்கலை கழகத்திற்கு உட்பட்ட கடல் சார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் துறையை சார்நத முனைவர் பிறின்ஸ் காட்சன் அவர்கள் முக்கிய குறிப்பு உரையை நடத்தினார்கள். மேலும் தேசிய கல்லூரி திருச்சி, நிலத்தியல் துறையை சார்ந்த முனைவர் வெங்கட்ராமன் மற்றும் முனைவர் இராதகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று கருத்தரங்கின் உரையை நிகழ்த்தினார்கள். கல்லூரி நிலத்தியல் துறை தலைவர் முனைவர் சதீஸ் ஹெர்பட் சிங் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் கருத்தரங்கை துவக்கி வைத்து வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்கள். ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் முதுநிலை மாணவர்கள் ஆய்வறிக்கைகளை சமர்பித்தனர்.

### 4. ஆராய்ச்சி மாணவர்கள்

தொழில்நுட்பவியல் துறையை சார்ந்த ஆராய்ச்சி மாணவி செறிஜா அவர்கள் தனது ஆராய்ச்சி முடிவுகளை 20.06.2025 அன்று சமர்பித்து முனைவர் பட்டம் பெற்றார்கள். முனைவர் மேரி ஹெலன் அவர்கள் ஆராய்ச்சி மேற்பார்வையாளராக செயல்பட்டார்கள்.

கணிணி அறிவியல் துறையை சார்ந்த ஆராய்ச்சி மாணவி புஷ்பாஅதிசயா சகிலாராணிஅவர்கள் தனது ஆராய்ச்சிமுடிவுகளை 23.06.2025 அன்று சமர்பித்து முனைவர் பட்டம் பெற்றார்கள். முனைவர் சுரேஷ் சிங் அவர்கள் ஆராய்ச்சி மேற்பார்வையாளராக செயல்பட்டார்கள்.



# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

நாகர்கோவில் மறைவட்ட இறச்சகுளம் தூய மிக்கேல் ஆலய வளாகத்தில், குருக்கள் தங்குவதற்கான இல்லமானது (அருளின் இல்லம்), 26.06.2025 (வியாழக்கிழமை) அன்று மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் திருக்கரங்களினால் திறந்து வைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. மறைவட்டத்தில் பணிபுரியும் அனைத்து குருக்கள், அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் மறைவட்ட குருக்கள் கூடுகையானது 30.06.2025 அன்று காலை 11.00 மணிக்கு, இறச்சகுளம் குருக்கள் இல்லத்தில் வைத்து, மறைவட்ட முதன்மை குருவின் தலைமையில் நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்டத்திற்கு புதிதாக பொறுப்பேற்று வந்த குருக்களுக்கு சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து பணி குழுக்களின் பொறுப்புகள் மாற்றம் செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதன்படி...

1. **Fr. John Kumar** - District Vicar, Vincent De Paul
2. **Fr. Robert** - MCA, Eccumanism & Dialogue
3. **Fr. Sajith Francis** - MCYM, Legion of Mary
4. **Fr. Jebin** - AYF
4. **Fr. Abinson Alex** - Priest Secratary, Media & Communication
5. **Fr. Ratheesh Richard** - Bible Apostolate, Arul Vazhviyam
6. **Fr. Sunish Kumar** - Catechism, Labour Commission
7. **Fr. Rejin Raj** - MCCL
8. **Fr. Sabin** - Altar Boys, Vocation Promoter

தொடர்ந்து மறைவட்டம் சார்ந்த பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு, மதிய உணவுடன் கூடுகை இனிதே நிறைவுற்றது.

# குலசேகரம் மறைவட்டம்

குலசேகரம் மறைவட்ட குருக்க;ள் கூடுகையானது 23.06.2025 திங்கட்கிழமை மாத்தார் புனித சூசையப்பர் மலங்கரை கத்தோலிக்க தேவாலய குருக்கள் இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. மறைவட்ட குருக்கள் அனைவரும் இணைந்து தேவாலயத்தில் வைத்து மதிய ஜெபத்துடன் கூடுகை ஆரம்பமானது. மறைவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்ற குருக்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், புதிதாக குலசேகர மறைவட்ட பங்குத்தளங்களுக்கு பொறுபேற்ற குருக்களை மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் மறறும் மறைவட்ட குருக்கள் இணைந்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தனர். மேலும் மறைவட்டம் நன்முறையில் செயல்பட பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு மதிய உணவுடன் கூடுகை இனிதே நிறைவுற்றது.

**குலசேகர மறைவட்டத்தில் புதிதாக இணைந்த குருக்கள் :**

அருட்தந்தை சில்ஜின் (பங்குத்தந்தை, அணக்கரை & முதலார்)
அருட்தந்தை றோபின் (துணை பங்குத்தந்தை, செருப்பாலூர்)
அருட்தந்தை ஜெறோம் காட்வின் (துணை பங்குத்தந்தை, மாத்தார்)

**Incharges**

| | |
|---|---|
| MCCL | - அருட்தந்தை சில்ஜின் |
| மறைக்கல்வி | - அருட்தந்தை பிபின் |
| Secretary | - அருட்தந்தை ஆன்றோ ஜெபின் |
| MCA | - அருட்தந்தை மரிய அற்புதம் |
| MCYM | - அருட்தந்தை சுரேஷ் ஆன்றனி |
| மரியாயின் சேனை | - அருட்தந்தை ரோபின் |
| Bible Commission | - அருட்தந்தை ரோபின் |
| Labour Commission | - அருட்தந்தை ஜெறோம் காட்வின் |
| Trustee | - அருட்தந்தை சில்ஜின் |
| Vincent-De-Paul | - அருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் |



# கொல்லங்கோடு மறைவட்டம்

கொல்லங்கோடு மறைவட்டக் குருக்களின் கூடுகை 30.06.2025 திங்கட்கிழமை கிராத்தூர் பங்குத்தந்தை இல்லத்தில் வைத்து மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு மறைவட்ட இயக்கங்களின் வளர்ச்சிக்கான பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

கொல்லங்கோடு மறைவட்டத்தின் இளையோர் இயக்கத்தின் புதிய இயக்குநராக அருட்தந்தை சஜீவ் பிலாங்காலை அவர்களும், பாலர் சபையின் மறைவட்ட புதிய இயக்குநராக அருட்தந்தை ஸ்டீபன் அவர்களும், மறைவட்ட குருக்கள் மன்ற செயலராக அருட்தந்தை ஜாண் ஷிபு அவர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

கொல்லங்கோடு மறைவட்டத்தின் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் கூடுகையானது அம்பிலிக்கோணம் பங்கில் வைத்து 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில், அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கொல்லங்கோடு மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் செயலராக திரு. பால்ராஜ் (புஷ்பகிரி) அவர்களும், பொருளராக திரு. அசோகராஜ் (பாலவிளை) அவர்களும் இக்கூட்டத்தில் வைத்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதோடு, கொல்லங்கோடு மறைவட்டத்திலிருந்து, மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவிற்காக திரு. ஜாண் (அடைக்காகுழி), திரு. பெனடிக்ட் (பாத்திமாநகர்), திரு. ஷெர்லின் (அம்பிலிக்கோணம்) மற்றும் விஜிலா ராணி (கடுவாக்குழி) ஆகியோர் தேர்வுச் செய்யப்பட்டார்கள்.

# ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள்



1 ➢ மத்தியாஸ்நகர் மற்றும் முக்கடல் தேவாலயங்களை அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.

5 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

5 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

6 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட விவிலிய கன்வென்ஷனை ஆசியுரையோடு துவங்கி வைத்தார்.

7 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

7 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட விவிலிய கன்வென்ஷனில் கலந்து கொண்டு இறைமக்களை ஆசீர்வதித்தார்.

8 ➢ வெட்டுக்குழி தேவாலயத்தில் பெந்தக்கோஸ்து தினவிழா திருப்பலியும் திருச்சடங்கும் நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.

8 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட விவிலிய கன்வென்ஷனில் கலந்து கொண்டு இறைமக்களை ஆசீர்வதித்தார்.

9 ➢ மலங்கரை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.



9 ➢ கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

10 ➢ மலங்கரை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

11 ➢ மலங்கரை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

12 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட Diocesan Council மற்றும் Finance Council கூட்டங்களுக்கு தலைமை தாங்கி கலந்தாலோசித்தார்.

14 ➢ கிறிஸ்துவிளாகம் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

15 ➢ வலியவிளை தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி மறுசீரமைக்கப்பட்ட அரங்கத்தையும் அர்ச்சித்தார்.

16 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

17 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

18 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

20 ➢ நடைக்காவில், MCC கல்லூரியின் துணையோடு கட்டப்பட்ட புதுமனையை அர்ச்சித்து ஆசீர்வதித்தார்.

20 ➢ MCC கல்லுரியின் முன்னாள் தாளாளர் மற்றும் முதல்வரின் பிரியாவிடை கூட்டத்தில் கலந்துகொண்டு புது தாளாளரையும் வரவேற்று ஆசீர்வதித்தார்.

21 ➢ Diocesan Council கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

22 ➢ மார் எப்ஃரேம் இளங்குருமடத்தில் திருப்பலி நிறைவேற்றி குருமாணவர்களுக்கு அருளுரை வழங்கினார்.

22 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

23 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

23 ➢ MIDS கைம்பெண்கள் நலத்திட்ட கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.

24 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

25 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

25 ➢ திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மார் போளிகார்ப்பூஸ் ஆண்டகையின் பிரிவு உபசார கூட்டத்தில் கலந்து கொண்டார்.

25 ➢ மாத்தூர்கோணம் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மையும் வழங்கி ஆசீர்வதித்தார்.

26 ➢ இறச்சக்குளத்தில் குருக்கள் தங்குவதற்கான அருள் இல்லத்தை அர்ச்சித்தார்.

27 ➢ மலங்கரை உயர்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இறையியல் வகுப்பெடுத்தார்.

28 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட தினம் மற்றும் புனித பவுலடியாரை பாதுகாவலராகக் கொண்ட தன் நாமவிழா திருப்பலியையும் மார்த்தாண்டம் பேராலயத்தில் நிறைவேற்றி 10 நபர்களுக்கு நற்செய்தி சங்க திருப்பணி ஏற்றல் திருச்சடங்கையும், மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் மற்றும் ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகையின் முன்னிலையில் நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

28 ➢ மார் எப்ரேம் வளாகத்தில் அமைந்துள்ள மேய்ப்புப்பணி அலுவலகத்தை திறந்து வைத்து அர்ச்சித்து ஆசீர்வதித்தார்.

28 ➢ MCA சபாதல சமதி மற்றும் MCMF சார்பாக நடைபெற்ற மகளிர் மாநாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாட்டில் தலைமை தாங்கி ஆசியுரையாற்றினார்.

29 ➢ மாவேலிக்கரை புது ஆயர் மேதகு போளிகார்பூஸ் ஆண்டகையின் ஆயர்பணி ஏற்றல் திருச்சடங்கிலும் திருப்பலியிலும் கலந்து கொண்டார்.




# இம்மாதம் நினைவு கூர

ஜூலை 2025


1 – தலைமைக்குரு ஆரோன்

3 – துக்றோனோ (மார் தோமாவின் நினைவு நாள்)
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் பெயர்விழா

3 

5 – எழுபத்திரண்டு அறிவிப்பாளர்கள்

6 – பெந்தக்கோஸ்துக்குப்பின் நான்காம் ஞாயிறு
புக்கோட்டில் ஜோசப் ரம்பானின் நினைவு
புனித மரிய கொரேத்தி

6 


11 – புனித பெனடிக்ட்

13 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
மார் சீலாஸ், ஆன்றணி மார் சில்வானூஸ் ஆண்டகையின் பெயர்விழா

15 – வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு (1953)
மார் குரியாக்கோஸ், மார்த்தா யூத்தியம்மாள்
ஆன்டனி மார் சில்வானூஸ் மற்றும் மேத்யூஸ் மார் போகோர்பூஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு (2022)

15 

16 – புனித கார்மேல் அன்னை


16 

17 – தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின் திருநிலைப்பாடு (1997)

19 – புனித மக்ரீனா

20 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஆறாம் ஞாயிறு
இறைவாக்கினர் எயா

22 – புனித மகதலா மரியாள்

28 

23 – இறைவாக்கினர் எசேக்கியேல்

24 – லபனோனில் தாபகராகிய புனித சர்பேல்

27 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஏழாம் ஞாயிறு

28 – புனித அல்போன்சா

29 – பெத்தானியாவின் மார்த்தாவும் மரியாவும் லாசரும்

31 – லெயோலாவின் புனித இக்னேஷியஸ்

28 

## மார்த்தாண்டம் மறைமாவட்ட விழா, மேதகு ஆயரின் பெயர்கொண்ட விழா



## மேய்ப்புப்பணி நிலையம் அர்ச்சித்தல்




## MCA – சபையளவிலான மகளிர் மாநாடு




## குருமட செய்திகள்



## அருட்தந்தை முனைவர் யூஜின் அவர்களுக்கு வாழ்த்துகளும்!! பாராட்டுகளும்!



## மறைபரப்புத்தளச் செய்திகள்



## MCYM



## மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்



## நற்செய்தி சங்கம்



## நாகர்கோவில் மறைவட்ட அருளின் இல்லம் அர்ச்சிப்பு



## Hom Special School




## Mids

